

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மாபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்கும் புகைப்படக் கணக்காட்சியை ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.



சென்னையில் பார் கவுன்சிலுக்குள் புகுந்து உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ராஜீவ் காந்தி மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய குண்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அருப்புக்கோட்டையில் வழக்கறிஞர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த போது எடுத்த படம்.

# நிலக்கோட்டை அருகே 2 புதிய அங்கன்வாடி மையங்கள் திறப்பு



**வத்தலகுண்டு, அக்.16-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியம் பள்ளபட்டி ஊராட்சியில் பள்ளபட்டி தெற்கு தெரு பகுதியில் ஒன்றும், பள்ளபட்டி வேலாயுதபுரத்தில் ஒன்றும் ஆக இரண்டு இடங்களில் 34.5 லட்சம் மதிப்பில் 2025 2026 நிதியாண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ள இரண்டு புதிய அங்கன்வாடி மையங்கள் திறப்பு விழாவில் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது.

நிலக்கோட்டை தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் வழக்கறிஞருமான மணிகண்டன் தலைமை வகித்து ரிப்பன் பெட்டி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சிகள் குமாரவேலு. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் எழில் வளவன் முன்னிலை வகித்தனர்.

அங்கன்வாடி மையங்கள் திறப்பு நிகழ்ச்சியில் ஹோண்டா அனைவரும் மரக்கன்றுகள் நடவு செய்தார்கள் ஒன்றிய திமுக இணைச்செயலாளர் வெள்ளிமலை மற்றும் திமுக நிர்வாகிகளான ராஜேந்திரன் கருப்பு அஜித் தங்கப்பாண்டி பால்பாண்டி பாஸ்கரன் மற்றொரு ராஜேந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் பள்ளபட்டி ஊராட்சி மன்ற செயலர் ராதா கிருஷ்ணன் நன்றி கூறினார்.

கமுதி அருகே பாப்பாங்குளம் உள்பட 2 கிராமங்களுக்கு

# பேருந்து வசதியை தி.மு.க. மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.கே.சண்முகநாதன் தொடங்கி வைத்தார்



**கமுதி, அக்.16-**

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பாப்பாங்குளம், அரிசிகுழுதான் ஆகிய இரண்டு கிராமங்களுக்கு பேருந்து வசதி வேண்டி தமிழக முதல்வர் அவர்களுக்கு நீண்டகால கோரிக்கையை வைத்தார்கள்.

அதனை நிறைவேற்றும் விதத்தில் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ் ராஜகண்ணப்பன் வழிகாட்டுதலுடன், ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் ஒப்புதலுடன் கமுதி மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.கே சண்முகநாதன் தலைமையில் புதிய வழிதடத்தில் இரு கிராமங்களுக்கும் பேருந்தை பச்சை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இதுவரை பேருந்து வசதியில்லாத பாப்பங்குளம், அரிசிகுழுதான் கிராம மக்கள் உற்சாகத்துடன் வரவேற்று மேளதாளத்துடன், குலவையிட்டு ஆராத்தி எடுத்து, மலர் மாலை அணிவித்து அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் பாப்பாங்குளம் ஊராட்சி தலைவர் லட்சுமி நாகமணி, முதல்நாடு ஊராட்சி தலைவர் காசிராஜன் மற்றும் பொதுமக்கள், திமுக கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மேற்கு 1-ம் பகுதி 80 வட்டக் அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு நலத்திட்ட உதவிகளை எஸ்.பி.சண்முகசுந்தரம் வழங்கினார். இதில் வட்ட செயலாளர் பாலமுருகன் முன்னாள் கவுன்சிலர் கே.போஸ் மற்றும் சேதுராமன், கே.முத்துராஜ், சக்திவேல், ஆட்டோ பால்ராஜ், சுப்புராஜ், வி.கே.மணி, முத்தழகு, ராதாகிருஷ்ணன் கிரீஸ் பாஸ்கரன், ஜெயராமன், எம். பாலமுருகன், ராஜேந்திரன், இ.பி. முத்துவேல், பாலகிருஷ்ணன், வக்கீல் முருகன், வழக்கறிஞர் சோலைமலை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அம்மையநாயக்கனூரில் பலத்த மழை:

# ரெயில்வே சுரங்கப்பாதையில் குளம்போல் தேங்கிய தண்ணீர்



**வத்தலகுண்டு, அக்.16-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகில் உள்ள கொடைரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. கொடைரோடு,அதன்தொடர்ச்சியாகநேற்றுமாலைஅம்மையநாயக்கனூர்பள்ளப்பட்டி,சிலுக்குவார்பட்டி உள்ளிட்ட பகுதியில் பலத்த காற்றுடன் மழை கொட்டித்தீர்த்தது.

சுமார் 1 மணி நேரமாக பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் குளம்போல் மழைநீர் தேங்கியது. குறிப்பாக அம்மையநாயக்கனூர்ரெயில்வேசுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். இந்த சுரங்கப்பாதையில் மழைக்காலங்களில் அடிக்கடி தண்ணீர்தேங்குகிறது. எனவே சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்குவதை தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருச்சி சத்திரம் பஸ் நிலையம் அருகே ராம்ராஜ் காட்டன் புதிய ஷோரூம் திறப்பு

**திருச்சி, அக் 16-**

ராம்ராஜ் காட்டன், திருச்சி - சென்னை டிரங்க் சாலையில் சத்திரம் பஸ் நிலையத்தில், மேலசிந்தாமணி, ரம்பா தியேட்டர் அருகே, தனது புதிய ஷோரூமை திறந்தது. அந்தப் பகுதி மக்கள் தங்கள் குடும்பத்திற்கான தீபாவளி ஷாப்பிங்கை ஒரே இடத்தில் செய்யும் வகையில் ஏராளமான ஆடை ரகங்களுடன் இந்த புதிய ஷோரூம் திறக்கப்பட்டு உள்ளது. புதிய ஷோரூமை ரம்பா தியேட்டர் நிறுவனர் என். மாணிக்கம் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவர் கே.ஆர். நாகராஜன் மற்றும் திருச்சி மாவட்ட எக்ஸ்னோரா துணைத் தலைவர் கலாவதி சண்முகம் உள்ளிட்ட ஏராளமான பேர் கலந்து கொண்டனர். முதல் விற்பனையை தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில் சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளர் கோவிந்தராஜுலு தொடங்கி வைத்தார். முதல் விற்பனையை திருச்சி ஜுவல்லரி சங்க தலைவர் விஜயராகவன் பெற்றுக் கொண்டார்.

திறப்பு விழா நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவர் கே.ஆர். நாகராஜன் கூறுகையில், தீபாவளிக்கு முன்னதாக திருச்சியில் ஒரு ஷோரூம் திறப்பது உண்மையிலேயே சிறப்பு வாய்ந்தது. பண்டிகை காலத்தில், எங்கள் வாடிக்கையாளர்கள் பாரம்பரியத்துடன் இணைந்திருக்கும் அதே வேளையில், பாரம்பரியம் மாறாத அதேசமயம் நவீன ஆடைகளை அணிந்து தீபாவளியை கொண்டாட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

திருச்சி எப்போதும் எங்களை அன்புடன் வரவேற்றுள்ளது என்று கூறினார். திறப்பு விழாவில் ராம்ராஜ் காட்டன் தலைவர் கே.ஆர். நாகராஜன், சுயம்வர கிராண்ட், பரிணயம் கிராண்ட், சங்கல்பம் கிராண்ட் மற்றும் ஜாக்கார்டு பார்டர்களுடன் கூடிய பிரீமியம் துணிகளில் வடிவமைக்கப்பட்ட வேட்டி-சட்டைகளின் கிராண்ட் கலெக்ஷன்களையும் அறிமுகப்படுத்தினார். ஸ்கை ப்ளூ, கோல்ட், மோஸ் கிரீன் மற்றும் ரோஸ் கோல்ட் போன்ற வண்ணங்களில் கிடைக்கும் இந்த ஆடைகள், பண்டிகையை உண்மையிலேயே சிறப்பானதாக மாற்றுவதற்காக தயாரிக்கப்பட்டு உள்ளன.

# டிரைப்வைப் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் கார்த்திக் லைவ் மாபெரும் இசை நிகழ்ச்சி

**கோவை, அக் 16-**

டிரைப் வைப்என்டர்டெயின்மென்ட் நிறுவனம், இசை ரசிகர்களுக்காக கார்த்திக் லைவ் என்ற சுற்றுப்பயணத்தின் மூலம் நேரடி இசையின் மந்திரத்தை மீண்டும் கொண்டு வர தயாராக உள்ளது. புகழ்பெற்ற பாடகர் மற்றும் இசையமைப்பாளர் கார்த்திக் அவர்களின் இந்த 10 நகரங்களில் நடைபெறும் மாபெரும் இசை நிகழ்ச்சி, அவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மேடைக்கு மீண்டும் திரும்புவதை குறிக்கிறது. இதில், அவர் தனது புகழ்பெற்ற ஹிட் பாடல்களையும் மனதை கவரும் இசை நிகழ்ச்சிகளையும் நேரடியாக ரசிகர்களுக்காக வழங்க உள்ளார். புக்மைஷோ நிறுவனத்தின் ஒரு பிரிவான டிரைப்வைப் என்டர்டெயின்மென்ட்தயாரித்து, விளம்பரப்படுத்தும் இந்த சுற்றுப்பயணம் தென் இந்தியாவின் 10 நகரங்களை திருப்பதி, விசாக், கோயம்புத்தூர், கொச்சி, ராஜமுந்திரி, பெங்களூரு, ஹைதராபாத், விஜயவாடா, சென்னை, மதுரை மற்றும் வாரங்கல் ஆகியவற்றை உள்ளடக்கி, நவம்பர் 30, 2025 முதல் தொடங்குகிறது. கோயம்புத்தூரில் டிசம்பர் 13, 2025 அன்று நடைபெறுகிறது.

இந்த சுற்றுப்பயணத்திற்கான டிக்கெட்டுகள் தற்போது இந்தியாவின் முன்னணி பொழுதுபோக்கு தளமான புக்மைக் ஷோவில் மட்டும் கிடைக்கின்றன.தன் தொழில்முறை வாழ்க்கையை பின்னணி பாடகராக தொடங்கிய கார்த்திக், இன்றைய இந்தியாவின் மிகவும் பல்துறை திறமைமிக்க பின்னணி பாடகர்களில் ஒருவராக உயர்ந்துள்ளார். தமிழில், தெலுங்கில், கன்னடத்தில், மலையாளத்தில், ஓடியா, பெங்காலி, மராத்தி மற்றும் ஹிந்தி உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் 8,000-க்கும் அதிகமான பாடல்களுக்கு தனது குரலை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓப்போ, இந்தியாவுக்காக ரெனோ 14 5ஜி தீபாவளி எடிஷனை அறிமுகப்படுத்தியது

**மதுரை, அக் 16-**

இந்திய சந்தைக்காக ஓப்போநிறுவனம் தனது புதிய ரெனோ14 5ஜி தீபாவளி எடிஷனை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்திய கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்ட இந்த சிறப்பு பதிப்பில் மண்டலா, மயில் மற்றும் தீபாவளி அலங்கார டிசைன்களுடன், இந்தியாவில் முதல்முறையாக வெப்பத்தின்படி நிறம் மாறும் வெப்ப உணர்திறன் தொழில்நுட்பம் இடம்பெற்றுள்ளது.ஒளி இருளை வெல்லும்தீபாவளியின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில், இந்த போன் கருப்பு நிறத்திலிருந்து பொன்னிறமாக மாறும் தனித்துவமான அனுபவத்தை வழங்குகிறது.விலை மற்றும் சலுகைகள்: ரெனோ14 5ஜிதீபாவளி எடிஷன் ரூ.39,999 என்ற விலையில் கிடைக்கிறது.பண்டிகை சலுகையாக ரூ.36,999-க்கு வாங்கலாம்.

ஓப்போ ஈ-ஸ்டோர், ஃபிளிப்கார்ட், அமேசான் மற்றும் முக்கிய ரீடெயில் கடைகளில் விற்பனை தொடங்கியுள்ளது. 6 மாத நோ காஸ்ட் இஎம்ஐ, 10% கேஷ்பேக் (அதிகபட்சம் ரூ.3,000), ரூ.3,000 வரை எக்ஸ்சேஞ் போனஸ் மற்றும் 3 மாத இலவச கூகிள் ஒன் + ஜெமினி அட்வான்ஸ்டு சேவைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், ஓப்போவாடிக்கையாளர்கள் ரூ.10 லட்சம் வரை கேஷ் பரிசு, 3 மாதம் எக்ஸ்டென்டட் வாரண்டி போன்ற பரிசுகளை வெல்லும் வாய்ப்பு பெறுவர். டிசைன் மற்றும் செயல்திறன்: 7.42எம்எம் மெல்லிய அலுமினியம் ஃப்ரேம், கார்னிங் கொரில்லா கிளாஸ் 7ஐ பாதுகாப்பு, 6.59-இன்ச் 1.5கே அமோல்டு டிஸ்ப்ளே, 50எம்பி டிரிபிள் கேமரா, 80டபிள்யூ சூப்பர்வூக் சார்ஜிங் மற்றும் மீடியாடெக் பரிமாணம் 8350 சிப் ஆகிய அம்சங்களுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தீபாவளியின் ஒளி, மகிழ்ச்சி மற்றும் அழகை பிரதிபலிக்கும் இந்த சிறப்பு எடிஷன், ஓப்போ-வின் பண்டிகை பரிசாக இந்தியாவுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது.



விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் மேலராஜகுலராமன் ஊராட்சி சத்திரப்பட்டியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை கலெக்டர் சுகபுத்ரா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பல்வேறு நலதிட்ட உதவிகளை வழங்கினார்.

# கலாம் நினைவிடத்தில் மாவட்ட ஆட்சியர் மலர் தூவி மரியாதை



**ராமேசுவரம்,அக்.16-**

இந்திய குடியரசு முன்னாள் தலைவர் மறைந்த ஏபிஜே அப்துல் கலாமின் 94 வது பிறந்த நாளை ஒட்டி அவரது நினைவகத்தில் அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் மலர் தூவி மரியாதை நேற்று செலுத்தினார்.

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்திய குடியரசு முன்னாள் தலைவர் மறைந்த ஏபிஜே அப்துல் கலாமின் 94 வது பிறந்தநாள் விழா நேற்று ராமேஸ்வரம் அருகே பேக்கரும்பு பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவகத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அப்துல் கலாமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் காலையில் 8 மணி அளவில் அவர் சமாதி முன்பு துவா ஓதி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள். இதனை தொடர்ந்து காலை 11 மணி அளவில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங்கா லோன் அப்துல் கலாம் சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத் தி னார்.தொ டர்ந்து ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர்,ராமேசுவரம் வட்டாட்சியர், உள்பட அதிகாரிகளும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் அப்துல் கலாம் பிறந்த நாள் விழா




**ஒட்டன்சத்திரம்,அக்.16-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் 94 வது பிறந்தநாள் விழா சக்தி கல்வி குழுமத்தின் தாளாளர் மருத்துவர் வேம்பணன் தலைமையில் நடை பெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் தேன்மொழி முன்னிலை வகித்தார்.

விழாவில் கல்லூரியின் ஆய்வு திட்ட அலுவலர் மேரி ஜோஸ்பின் இசபெல்லா சிறப்புரையாற்றினார். இறுதியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் தேன்மொழி அப்துல்கலாம் திருவுருவ படத்திற்கு தீபம் ஏற்றி மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் அமுதபிரியா, உள்ளிட்ட குழுவினர் செய்திருந்தனர்.

# அருப்புக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நகராட்சியை கண்டித்து ஆர்ப்பாட்டம்




**அருப்புக்கோட்டை,அக்.16-**

அருப்புக்கோட்டையில் நகர மக்களுக்கு அடிப்படை வசதிகளை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் முன்பு அருப்புக்கோட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகர் குழு சார்பாக அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு அருப்புக்கோட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர் பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். நகரக் கழகச் செயலாளர் பரமதயாளன் முன்னிலை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் முருகன் சிறப்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தில் நகராட்சியில் உயர்த்தப்பட்ட சொத்து வரியை ரத்து செய்ய வேண்டும், நகரில் குப்பைகளை தினமும் முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும், பொதுமக்களுக்கு நகரில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், தினமும் பொதுமக்களை கடிக்க துரத்தும் தெரு நாய்களை கட்டுப்படுத்த வேண்டும், கழிவு நீர் வாருகளை தினமும் சுத்த செய்ய வேண்டும் உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். நிகழ்ச்சியில் முன்னால் நகர செயலாளர் காத்தமுத்து மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் தூய்மை விழிகள் அறக்கட்டளை சார்பில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் பங்கேற்ற மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நிர்வாகி ராஜகோபால், பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி விமலா, திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசாமி கோயில் அறங்காவலர் முனைவர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் சாமிதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்**

Printed Published and Owned by S.Manimaran, Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018. Phone: 0452- 2668165, 0452- 2668185, E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## வாகைக்குளம் அய்யனார் கருப்பசாமி கோவில் சிலைகளை தலையில் சுமந்து பக்தர்கள் நேர்த்திக்கடன்



திருமங்கலம், அக். 16-

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகேயுள்ள வாகைக்குளம் கிராமத்திலுள்ள அய்யனார் கருப்பசாமி முத்தாலம்மன் கோவிலில் நடைபெற்ற புரட்டாசி பொங்கலை முன்னிட்டு நடைபெற்ற சிலையெடுப்பு திருவிழாவில் பக்தர்கள் தாங்கள் நேர்ந்து கொண்டு நிறைவேறியவற்றை சிலைகளாக வடித்து தலையில் சுமந்தபடி ஊர்வலமாகச் சென்று நேர்த்திக் கடன் செலுத்தினர்.

திருமங்கலம் தாலுகா வாகைக்குளம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற அய்யனார் கருப்பசாமி முத்தாலம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் புரட்டாசி பொங்கல் சிலையெடுப்பு திருவிழா மிகவும்புகழ்பெற்றதாகும்.

இந்த கோவிலில்பக்தர்கள் தாங்கள் வேண்டிக்கொண்டது நிறைவேறினால், வேண்டிக் கொண்டதை சிலையாக வடித்து தலையில் சுமந்தபடி ஊர்வலமாக வந்து கோவிலில் வைத்து நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதற்காக வாகைக்குளம் கண்மாயிலுள்ள களிமண்ணை கொண்டு சிலைகள்செய்யும் பணிகள் தீவிரமாகநடைபெற்று வந்தது.இந்நிலையில் வாகைக்குளம் அய்யனர் கருப்பசாமி திருக்கோவில் புரட்டாசி பொங்கல் திருவிழாவின் முக்கிய நிகழ்வான நேற்று மாலை ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சிலைகளை சுமந்து ஊர்வலமாக சென்ற சிலையெடுப்பு திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதிர்வெடிகள் வெடித்திட, மேளதாளங்கள் முழங்கிட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்த சிலையெடுப்பு திருவிழாவில் பக்தர்கள் தாங்கள் கோவிலில் வேண்டிக் கொண்டு நிறைவேறியவற்றை தத்ரூபமான சிலைகளாக வடிவமைத்து தங்களது தலையில்சுமந்தபடி கிராமத்து மந்தை வழியாக வயல் வெளிகளை கடந்து ஊர்வலமாகச் சென்றனர். குறிப்பாக தாங்கள் வேண்டிக் கொண்டு நிறைவேறிய ஆசிரியர்,ராணுவவீரர், திருமணம் நடத்தல்,சுகம் கிடைத்தல்,உடல் பாகங்கள், வீடுகள், ஆடு,மாடுகள் மற்றும் அய்யனார் கருப்பசாமி தெய்வங்களின் சிலைகளை எடுத்துச்சென்று துவக் கோவிலில் வைத்து தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.முற்றிலும் புதுமையான முறையில் நிறைவேறிய வேண்டுதல்களை சிலைகளாக வடித்து தலையில் தூக்கி வந்து பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்தும் திருவிழாவினை காண்பதற்கு சுற்றுப்புற கிராமப் பகுதிகளிலிருந்து ஆயிரக் கணக்கானோர் திரண்டு வந்து திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்து வழிபாடு நடத்திச் சென்றனர்.

## ஸ்கை ஸ்கேனர் 2026 பயண போக்குகள் அறிக்கை வெளியீடு

சென்னை, அக். 16-

உலகப் பிரபலமான பயணச்செயலியான ஸ்கை ஸ்கேனர், டிராவல் டிரெண்ட்ஸ் 2026 அறிக்கையை வெளியிட்டு இந்திய பயனர்களின் புதிய விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளது. அறிக்கையின் படி, பயணிகள் இப்போது தங்கள் சொந்த ஆசைகள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்றவாறு பயணங்களைத் திட்டமிட்டு தேர்வு செய்வார்கள். அழகு, உடல்நலம், மலையேற்றம், புத்தகம் மற்றும் உறவுகள் ஆகியவை முக்கிய காரணமாக மாறியுள்ளன. இந்தியர்கள் 2026-ல் அதிகம் பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளனர், இதற்காக விமான டிக்கெட், தங்குமிடம் மற்றும் வாகன வாடகைக்கு அதிக செலவு செய்யத் தயாராக உள்ளனர்.

இது குறித்து ஸ்கை ஸ்கேனர் நிறுவனத்தின் டிராவல் டிரெண்ட்ஸ் மற்றும் டெஸ்டினேஷன் பிரிவு நிபுணர் நீல் கோஸ் கூறுகையில், இந்தியப் பயணிகள் இப்போது பயணத்தில் அழகான அனுபவமும் தனிப்பட்ட திருப்தியும் தேடுகிறார்கள். அவர்கள் அமைதியான மற்றும் உண்மையான உள்ளூர் அனுபவங்களை வழங்கும் மாற்றான இடங்களை விரும்புகிறார்கள். மேலும் இணையவழி கருவிகளை அதிகமாக பயன்படுத்துகிறார்கள். ஏஐ தொழில்நுட்பத்தை பயணத் திட்டமிடலுக்காக 86% பேர் நம்பிக்கை வைத்திருப்பது. இந்தியர்கள் உலக அளவில் முன்னணி நிலையில் உள்ளதை உணர்த்துகிறது என்றார். மேலும் சூர்யகுமார் யாதவ் கூறுகையில், பயணம் எனக்கு மன அமைதியைத் தரும், புதிய கலாச்சாரங்களை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும். ஸ்கை ஸ்கேனர் உதவியுடன் பயணங்களை குறைந்த செலவில், மறக்க முடியாத அனுபவங்களுடன் திட்டமிடுவது எளிதாகி உள்ளது. அறிக்கையில் அதிகம் தேடும் இடங்களில் ஜோர்ஹாட், யாழ்ப்பாணம் மற்றும் குறைந்த செலவிலான இடங்களில் திருப்பதி, லங்காவி ஆகியவை முன்னணியில் உள்ளன என்று கூறினார்.

---

மோட்டார் வாகன இழப்பீடு கோரும் தீர்ப்பாயம் (சிறப்பு மாவட்ட நீதிமன்றம்) மதுரை.
M.C.O.P.No.2761/2024
1. P.முத்துமாரி. (48/2024) க/பெ. பழனிசாமி
2. P.பாண்டிப்பிரியா (29/2024) த/பெ.பழனிசாமி
3. P.கருப்புசாமி (26/2024) த/பெ.பழனிசாமி
இவர்களின் வசிப்பிடம் : க.எண்.18/29, கிழக்கு தெரு, பொன்மேனி, மதுரை தெற்கு, மதுரை.
...மனுதாரர்கள்
/Vs /
1. S.போஸ். த/பெ. சுப்பையா முனிமாண்டிபுரின்னை காம்பவுண்டு, சம்மட்டிபுரம், மதுரை.
2. நடராஜன், த/பெ. கொறையன் க.எண்.85/5ஏ, ராதாகிருஷ்ணன் தெரு, மதுரை-625003.
3. தி மேனேஜர், M/s. நேஷனல் இன்சூரன்ஸ், மேமொரசி வீதி, மதுரை.
பாலிசி எண். 640101312310006769
பாலிசிகாலம்12.07.2024 to 19.09.2025
...R1 & R2 எதிர்மனுதாரர்கள்
நீதிமன்ற அறிவிப்பு
மேற்படி மனுதாரர்கள் மோட்டார்வாகனச்சட்டப்பிரிவுகள் 164 & 166, 171 மற்றும் 24(3) உடன் இணைந்த விதி 3(1) தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய விதிகள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 54/94 -ன் படியான இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி R1 & R2 எதிர்மனுதாரர்கள் வருகின்ற 03.12.2025 -ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அன்று காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.
/ஜோடிஉத்தரவுப்படி/
K.மணிகண்டன். B.Com.,L.L.B., வழக்கறிஞர். மதுரை.

---

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, PREETHA P D/o.V.M.Pandiarajan, Aged 38 Years, Permanently Residing at : D.No. 306/307, Karpaga Nagar 12th Street, K.Pudur, Madurai District, Tamilnadu - 625 007. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

PREETHA P

---

தமிழ்நாடு அரசு
**நீர்வளத்துறை**
கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை 630 562.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(இரண்டு உறை ஒப்பந்த முறை-1 எண்ணம் மற்றும் மொத்த வகை ஒப்பந்த முறை-2 எண்ணம்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:03 / கீ.வை.வ.வ / Gen.Tender Notice / 2025-2026 / நாள்.06.10.2025.
தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக நீர்வளத்துறை, கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை, கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தமிழ்நாடு அரசில் நீர்வளத்துறை / பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து www.tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலம் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
ஒப்பந்தப்புள்ளி நாள்: 24.10.2025 | மொத்த பணிகள்: 03
வேலையின் தோராய மதிப்பு (GST வரி உட்பட): 662.40 இலட்சம்
மேலும் விவரங்களுக்கும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இலவசமாக பெறவும் www.tntenders.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும். ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.
செ.ம.தொ.இ /5674 / ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து.., கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை.

---

## முதுகுளத்தூர் அருகே புரவி எடுப்பு விழா

முதுகுளத்தூர், அக். 16-

முதுகுளத்தூர் அருகே இலந்தைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள் பாலிக்கும் ஸ்ரீ ஐயனார் கோவில் புரவி எடுப்பு விழா நடைபெற்றது. இலந்தைகுளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்பாலித்து வரும் அய்யனார் கோவில் புரட்டாசி மாத பொங்கல் விழாவை முன்னிட்டு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை நடைபெற்று வரும் புரவி எடுப்பு விழா முன்னிட்டு பேரையூரிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் அய்யனார், பேச்சியம்மன், கருப்பசாமி, மாரியம்மன், தவழும் பிள்ளை, கை கால் உருவங்களை வடிவமைத்து மேலதாளங்கள் வான வேடிக்கையுடன் ஊர்வலமாக தலை சுமையாக எடுத்து சென்று இலந்தைகுளம் கிராமத்திற்கு வந்தடைந்தது. திருவிழாவை முன்னிட்டு கடந்த வாரம் காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது நாள் தோறும் அய்யனாருக்கு சிறப்பு பூஜை அபிஷேக அலங்காரம் தீபாரனை நடைபெற்றது. திருவிழாவின் கடைசி நாளான நேற்று முன்தினம் மாலையில் காளியம்மன் கோயில் முன்பாக பெண்கள் பொங்கல் வைத்து அய்யனார் பரிவார காவல் தெய்வங்களுக்கு அலங்காரம் செய்து கண் திறந்து சிறப்பு பூஜை வழிபாடு செய்தனர். இதில் எலந்தகுளம் முதுகுளத்தூர் மதுரை ராமேஸ்வரம் உள்ளிட்ட சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் பலர் கலந்து கொண்டு அய்யனார் அருள் ஆசி பெற்று சென்றனர்.

---

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி / மொத்த ஒப்பந்தம் / இணையவழிமூலம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 27க. பொ / கட்டடம் (க&ப) வட்டம் / சிவ / 2025 - 2026 / நாள் : 14.10.2025
தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து, கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
1) வ.எண். 1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் : 24.10.2025 பிற்பகல் 03.00 மணி முதல் 10.11.2025 மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும். (மின்னணு முறை)
2) வ.எண். 1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி: 10.11.2025 மாலை 03.00 மணி வரை (மின்னணு முறை)
3) வ.எண். 1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி திறப்பு: 11.11.2025 மாலை 03.00 மணிக்கு (மின்னணு முறை)
4) வ.எண். 1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி ... : 31.10.2025
5) வ.எண். 1 மற்றும் 2 - ... : 07.11.2025
கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து, கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டடம் (க&ப) வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / 14.10.2025

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு | முன்வைப்புத் தொகை / காலம் | ஒப்பந்ததாரர் வகுப்பு |
| --- | --- | --- | --- | --- |
| 1. | சென்னை–8, எழும்பூர், ஐஜி மற்றும் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள மகளிர் மருத்துவ அறுவை சிகிச்சைப் பிரிவுக்கு தீயணைப்பு தெளிப்பான் வசதிகள் செய்யும் பணி | ரூ.96.00 இலட்சங்கள் | ரூ.58,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 2. | சென்னை–8, எழும்பூர், ஐஜி மற்றும் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள முதலியார் பிளாக்கிற்கு தீயணைப்பு தெளிப்பான் வசதிகள் செய்யும் பணி | ரூ.189.35 இலட்சங்கள் | ரூ.1,05,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 3. | திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் கிளை நூலகம் கட்டும் பணி | ரூ.75.20 இலட்சங்கள் | ரூ.48,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

குறிப்பு:–
1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in.
2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 28.10.2025.
3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 31.10.2025 மாலை 3.00 மணி வரை
4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 31.10.2025 மாலை 4.00 மணி
5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்
செமதொஇ/ 5665 /ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்
மின்னணு– ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மொத்ததொகை ஒப்பந்த முறை
மின்னணு–ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 31/2025–2026/க.பொ/க(க&ப)வட்டம்/சேலம்/நாள் 14.10.2025
தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் கீழ்க்காணும் பணிகளுக்கு இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" ஒப்பந்தப்புள்ளியை 17.10.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 31.10.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 31.10.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி இணைய வழி மூலம் "https: "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.10.2025 -ல் பிற்பகல் 3.30 மணி முதல் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
| --- | --- | --- | --- | --- |
| 1 | கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் விந்து பதப்படுத்தும் ஆய்வகத்திற்கான சேகரிப்பு முற்றம், மாற்றும் அறை, உயிரி பாதுகாப்பு வளாகச் சுவர் கட்டடம் கட்டும் பணி | 199.90 | 1,10,000 | 150 நாட்கள் |
| 2 | தருமபுரி மாவட்டம் சித்தேரி அரசு பட்டுப்பண்ணையில் இளம்புழு வளர்ப்பு மனை மற்றும் சௌக்கி (Chawki) வளர்ப்பு மையம் கட்டடம் கட்டும் பணி | 93.60 | 57,000 | 150 நாட்கள் |
| 3 | தருமபுரி மாவட்டம் ராயப்பன்கொட்டாயில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் 3 வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வக கட்டடம் கட்டும் பணி | 74.65 | 47,500 | 210 |

ஒப்பந்ததாரர் வகுப்பு : பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு–IV ல் மாநில அளவில் /. இவ்வட்ட அளவில் (ரூ.50.00 இலட்சம் முத முதல் ரூ.2.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல்
முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் : முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம்.
பணிகளின் பெயர், முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையதளத்திலும் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் "https://tntenders.gov.in"-ல் பதிவேற்றம் செய்யப்படும்.
செ.ம.தொ.இ./5659/ஒப்பந்தப்புள்ளி/ 2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க &ப) வட்டம், சேலம்–7.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–05.
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 30 கட்டட (க & ப) வட்டம் 2, 2025–26, நாள்: 13..10.2025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை/ இன விலை முறை
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–05 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிகளுக்காக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
| --- | --- | --- | --- | --- |
| 1. | செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்லூரி மாணவர்கள் விடுதி கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ. 1,06,100/– | ரூ. 192.04 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 2. | செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் ஆடிட்டோரியம் மேடை, கூரை, தரைகள், உள்புறம் மற்றும் வெளிப்புற சுவர்கள் புதுப்பித்தல் மற்றும் இதர பழுது பார்க்கும் பணிகள் செய்யும் பணி. மு.வை.தொகை: ரூ.85,600 /– | ரூ. 151.20 இலட்சங்கள் | 5 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 3. | செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பழைய ஆண்கள் விடுதியில் உள்ள சமையலறை மற்றும் ஆண்கள் விடுதி (G +3) கட்டடத்தில் பழுதடைந்த கூரை மற்றும் தரைகள், மேற்கூறை, கதவுகள், ஜன்னல்கள் புதுப்பித்தல் மேற்கொள்ளும் பணி. மு.வை.தொகை: ரூ.66,200 /– | ரூ. 112.28 இலட்சங்கள் | 5 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 4. | செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சானடோரியத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் நெஞ்சக மருத்துவ வளாகத்தில் உட்புற கான்கிரீட் சாலையை சிறப்பு பழுது பார்க்கும் பணி. மு.வை. .தொகை: ரூ. 1,17,400/– | ரூ. 214.62 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு III மற்றும் அதற்குமேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும். 2. பணித்தள வருகை சான்றிதழுக்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 22.10.2025. 3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 24.10.2025 மாலை 03.00 மணி வரை 4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 24.10.2025 மாலை 04.00 மணி
செ.ம.தொ.இ/5638/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–2, சேப்பாக்கம், சென்னை–5.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம்
தேனி
O.S.No : 350/2024
திரு. A.கலையரசன், த/பெ. அப்பாத்துரை , பிளாட் எண்.33, N.G.O. காலனி, ஊஞ்சாம்பட்டி, பெருமாள் கோவில் ரோடு, தேனி தாலுகா, தேனி மாவட்டம்.
-வாதி -
- எதிர் -
1. திரு. M.கணேசன், த/பெ.மொக்கசாமி, க.எண்.139/12, கீழ்புறம் 4வது தெரு, பாரஸ்ட் ரோடு, தேனி அல்லிநகரம் நகராட்சி, தேனி தாலுகா, தேனி மாவட்டம்.
2. K. மதன், த/பெ.காளிமுத்து, 4வது தெரு, பாரஸ்ட் ரோடு, தேனி அல்லிநகரம் நகராட்சி, தேனி தாலுகா, தேனி மாவட்டம்.
- 1, 2ம் பிரதிவாதிகள் -
அறிவிப்பு
மேற்படி வாதி தரப்பில் பிரதிவாதி மீது விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கானது 22.10.2025ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கின் 1, 2ம் பிரதிவாதிகளுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 22.10.2025-ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.
திரு. S.M.சுந்தர் ராஜ்குமார், M.SC., B.L., வழக்கறிஞர், பெரியகுளம்.

---

மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், உத்தமபாளையம்
ந.க.எண்: 4918 / 2024 /அ1
திரு. முருகன், த/பெ. கருப்பையா, ஆண்டவர் கோவில் தெரு, கரியப்பகவுண்டன்பட்டி, இராசிங்காபுரம் கிராமம், போடிநாயக்கனூர் வட்டம்,
-மனுதாரர்-
-எதிர் -
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள் போடிநாயக்கனூர்
- எதிர்மனுதாரர் -
அறிவிப்பு
மேற்படி நிர் மனுவில், மனுதாரரின் தாயார் பாப்பாத்தி, க.பெ, கருப்பையா என்பவர் கடந்த 25.01.2019ம் தேதியன்று இராசிங்கபுரம் கிராமத்தில் வைத்து இறந்துவிட்டார். அவருடைய இறப்பை அறியாமையின் காரணமாக பதியவில்லை. எனது தாயாரின் இறப்பை எதிர்மனுதாரர் பராமரித்து வரும் இறப்பு பதிவேட்டில் பதிந்து இறப்பு சான்றிதழ் வழங்க கோரி சமூகம் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இவ்விளம்பரம் வெளிவந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சம் மனு மீது ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
முருகன், மனுதாரர்

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் சார் ஆட்சியர் அலுவலகம் பரமக்குடி
ந.க.பி 6/144/2025
முத்துராக்கு த/பெ நடராஜபிள்ளை ஓரிவயல், மாரந்தை (அஞ்சல்) கடலாடி (தாலுகா)
அறிவிப்பு
மேற்படி முகவரியில் வசிக்கும்மனுதாரராகிய நான் எனது மகள் கல்யாணி கார்த்திகா என்பவர் கடந்த 23-5-1989 ந்தேதி கடலாடி வட்டம் ஓரிவயல் கிராமத்தில் உள்ள வீட்டில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன்.என்னுடைய மகள் பிறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறிவிட்டேன் மேற்படி விசாரணைக்கான வாய்தா பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது இதில் யாருக்கேனும் ஆட்சியபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களில் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்கள் ஆட்சேபனை தெரிவித்துகொள்ளலாம்.
மனுதாரர் முத்துராக்கு

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.8461/2025/ஆ6
இ.ப. வ.எண்.207/2024/ஆ6
ராமு , த/பெ. மல்லையன் , 1/197, வடக்கு தெரு, சக்கையநாயக்கனூர், ஜம்புத்துரை கோட்டை கிராமம், நிலக்கோட்டை வட்டம் , திண்டுக்கல் மாவட்டம்
... மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் தாத்தா சித்தைய கவுண்டர் கடந்த 1.01.1985 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.1761/2025/ஆ6
இ.ப. வ.எண்.69/2025/ஆ6
நாகேந்திரன் , த/பெ. கந்தசாமி, 18-16-12, திருவள்ளுவர் சாலை, காந்திநகர் , வத்தலகுண்டு, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்
... மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் தாயார் ஜெயம் கடந்த 21-12-2006ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்.

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.
ந.க.எண்.3144/2024/ஆ2
L.ராமன், த/பெ.லெட்சுமணன் கதவுஎண்.19,2வது தெரு முகம்மதுஷாபுரம், திருமங்கலம் டவுன் மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாராகிய நான், எனது தந்தை வழி தாத்தா காக்காகுஞ்சு என்ற சுந்தத்தேவர், த/பெ. சின்னச்சாமித்தேவர் என்பவர் கடந்த 11.04.1987-ம் தேதி திருமங்கலம் வட்டம், கரடிக்கல் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர் L.ராமன் திருமங்கலம் டவுன்.

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.
ந.க.எண்.3145/2024/ஆ2
L.ராமன், த/பெ.லெட்சுமணன் கதவுஎண்.19,2வது தெரு முகமதுஷாபுரம், திருமங்கலம் டவுன், மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் சிவனம்மாள், க/பெ.லெட்சுமணன் என்பவர் கடந்த 11.04.1997-ம் தேதி திருமங்கலம் வட்டம்,கரடிக்கல் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர் L.ராமன் திருமங்கலம் டவுன்.

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.
ந.க.எண்.1946/2025/தே
ராக்கம்மாள், க/பெ.கருப்பையா மேலத்தெரு, குராயூர் கிராமம் கள்ளிக்குடி வட்டம் மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
-------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாராகிய நான், எனது தாயார் பாக்கியத்தம்மாள், க/பெ. பெரியாம்பிள்ளை என்பவர் கடந்த 01.06.1977-ம் தேதி கள்ளிக்குடி வட்டம்,குராயூர் கிராமத்தில் உள்ள மேலத் தெருவில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர் ராக்கம்மாள் குராயூர் கிராமம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். உசிலம்பட்டி.
E.P.No:37/2025 IN O.S.No:144/2022
ரவிச்சந்திரன்
------- வாதி
--------எதிரிடை------
1.மீனா க/பெ.சுந்தரபாண்டி (லேட்) கதவுஎண்.3/22/1,மேற்கு வீதி குள்ளிசெட்டிபட்டி நிலக்கோட்டை தாலுகா திண்டுக்கல் மாவட்டம்.
-------- 1-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 11.11.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். உசிலம்பட்டி.
E.P.No:22 OF 2025 IN O.S.No:301 OF 2017
பாண்டி
------- வாதி
--------எதிரிடை------
1.செல்வி, க/பெ.குணராஜா பொருப்பு மேட்டுப்பட்டி உசிலம்பட்டி தாலுகா மதுரை மாவட்டம்.
2.சோணை, த/பெ.குணராஜா --மேற்படி விலாசம்--
3.முத்துப்பாண்டி, த/பெ.குணராஜா --மேற்படி விலாசம்--
4.ஜீவகிருஸ்டி, க/பெ.தங்கப்பாண்டி --மேற்படி விலாசம்--
-------- 2முதல்5 பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 12.11.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். உசிலம்பட்டி.
A.S.No:8 OF 2025
சின்னத்தாயி
------- அப்பீல் வாதி
--------எதிரிடை------
1.செந்தாமரை, க/பெ.துரைப்பாண்டி மல்லாங்கிணர் கிராமம் & போஸ்ட் காரியாபட்டி தாலுகா விருதுநகர் மாவட்டம்.
2.காளீஸ்வரி, க/பெ.பொன்ராஜ் --மேற்படி விலாசம்--
3.கோபாலகிருஷ்ணன் த/பெ.பொன்ராஜ் --மேற்படி விலாசம்--
4.ஜெயலட்சுமி, த/பெ.பொன்ராஜ் --மேற்படி விலாசம்--
5.ஜெயகிருஷ்ணன், த/பெ.பொன்ராஜ் --மேற்படி விலாசம்--
6.தங்கமணி, த/பெ.சின்னமுத்து சங்கரப்பநாயக்கனூர் கிராமம் உசிலம்பட்டி தாலுகா மதுரை மாவட்டம்.
-------- 3முதல்7,9 அப்பீல் பிரதிவாதிகள்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் 3முதல்7,9 அப்பீல் பிரதிவாதிகளாகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 29.10.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். உசிலம்பட்டி.
O.S.No:144 OF 2024
கனரா வங்கி உசிலம்பட்டி அதன் முதுநிலை கிளை மேலாளர் மூலம்
------- வாதி
--------எதிரிடை------
V.பஞ்சவர்ணம்
-------- பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி வழக்கில் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய தாக்கல் செய்த வழக்கில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 10.11.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். உசிலம்பட்டி.
O.S.No:56/2020
கனரா வங்கி உசிலம்பட்டி அதன் முதுநிலை கிளை மேலாளர் மூலமாக
------- வாதி
--------எதிரிடை------
ரீட் டிரஸ்ட் கதவுஎண்.23/3, கனரா வங்கி தெரு உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் அதன் மேனேஜிங் டிரஸ்டி மூலம்
-------- 14-வது பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி நிர் வழக்கில் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய தாக்கல் செய்த வழக்கில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 10.11.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம். திருமங்கலம்.
O.S.No:157/2019
கனரா வங்கி கிளை-2 திருமங்கலம்- SYNDICATE BANK
------- வாதி
--------எதிரிடை------
சிவராமன், S/o.ராஜன் கதவுஎண்.3/380, செந்தூர் நகர் தெற்குத்தெரு, திருமங்கலம் மதுரை மாவட்டம்.
-------- 1-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 03.11.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது.அன்றைய தினம் தாங்கள் காலை 10.30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
திரு.S.கணபதி,B.A.,B.L., அட்வகேட், திருமங்கலம்.

---

சார் ஆட்சியர் நீதிமன்றம் தேவகோட்டை
ந.க.பி2/6636/2025
ராஜேந்திரன், த.பெ.மலைக்கொழுத்து 11/81,புதுத்தெரு, மீனாட்சிபுரம், காரைக்குடி. காரைக்குடி வட்டம். சிவகங்கை மாவட்டம்
- மனுதார்
எதிர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி.
–எதிர்மனுதார்
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, காரைக்குடி, மீனாட்சிபுரம், புதுத் தெரு, கதவு எண்.11/81, என்ற முகவரியில் உள்ள வீட்டில் வசித்து வரும் மலைக்கொழுத்து அவர்கள் மகன் இந்து சுமார் 68 வயதுள்ள ராஜேந்திரன் என்பவர் தனது தாயார் சேது என்ற மங்களம் க/பெ. மலைக்கொழுந்து என்பவர் கடந்த 22.12.2012-ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, காரைக்குடி, மீனாட்சிபுரம், புதுத்தெரு, கதவு எண்.11/81 என்ற முகவரியில் உள்ள வீட்டில் தனது 82 என்ற முகவரியில் இறந்ததாகவும், மேற்படியாரது இறப்பினை பதிவு செய்ய தவறிவிட்டதாகவும் தெரிவித்து, மேற்படியாரது இறப்பினை எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய கோரி மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படியாரது இற்ப்பினை பதிவு செய்வது தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட 10 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.
R.Partha Sarathy, B.Tec.,LLB., Advocate, Karaikudi.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.7528/2025/ஆ6
இ.ப. வ.எண்.114/2025/ஆ6
ராதாகிருஷ்ணன் , த/பெ. ஆறுமுகம் , உட்கடை, 44, அசோக் நகர், செட்டிநாயக்கன்பட்டி கிராமம், திண்டுக்கல் மேற்கு வட்டம் , திண்டுக்கல் மாவட்டம்
... மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் தம்பி ராஜா கடந்த 10.07.2001 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்.

---

ந.க.எண்.5265/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், D.No.136, பில்லூர் கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் கார்த்திகேயன் என்பவரின் மகன் நவீன்பத்மநாபன் என்பவர் கடந்த 17.05.2004-ம் தேதியில் ஷை முகவரியில் பிறந்துள்ளார். மேற்படி பிறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த பிறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள பிறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கார்த்திகேயன் மனுதார்

---

ந.க.எண்.5798/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், D.No.4, இளையான்குடி சாலை கிழக்கு, இந்திரா நகர் என்ற முகவரியில் வசித்து வரும் சாமு என்பவரின் தாயார் சீத்தா க/பெ. அழகர் என்பவர் கடந்த 11.03.2009-ம் தேதி சிவங்கை மாவட்டம், சிவகங்கை வாட்டம்,O.புதூர் பஞ்சாயத்து, குளக்கட்டப்பட்டி கிராமம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சாமு மனுதார்

---

ந.க.எண்.5373/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், D.No.12/338, திருவள்ளுவர் நகர், பரமக்குடி என்ற முகவரியில் வசித்து வரும் கருப்பையா என்பவரின் தாயார் கண்ணாத்தாள் க/பெ. மாரிமுத்து என்பவர் கடந்த 24.06.1998-ம் தேதியில் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம் , மாங்குடி தெற்குவாடி பஞ்சாயத்து, கோடங்கிபட்டி கிராமம், என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கருப்பையா மனுதார்

---

ந.க.எண்.5796/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், D.No.2/1A பிரவலூர் கிராமம், ஒக்கூர் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் செல்வராஜ் என்பவரின் தந்தை காளிமுத்து த/பெ. பெரியகருப்பன் என்பவர் கடந்த 08.07.1986-ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
செல்வராஜ் மனுதார்

